தலைப்பு 337 – கறுவா அபிவிருத்தி திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 337 – கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கறுவா அபிவிருத்தி திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை கறுவா அபிவிருத்தி

திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கறுவா அபிவிருத்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும்

மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டினுள் துருசவி நிதியத்திலிருந்து கறுவா அபிவிருத்தி திணைக்களத்திற்கு பெறப்பட்டிருந்த 09 அலுவலக உறுப்படிகளுக்குரிய 21 அலகுகள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தொடர்புடைய சொத்துக்கள் மதிப்பிடப்பட்ட பின்னர் 2025 யூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தொடர்புடைய சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு சரியாக மூலதனமாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ii)	2024 சனவரி 24 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் 2024 சனவரி 30 ஆம் திகதி கறுவா அபிவிருத்தி	சொத்துக்கள் உரிய வண்ணம் கையளிக்கப்பட்ட பின்னர் சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு புத்தகங்களில் குறித்துக்	எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன்னர்

திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளமையினால் அங்கிருந்த 17,812 சதுர அடி பரப்பளவிலான 21 கட்டிடங்களும் 1,125 கன அடி பரப்பளவிலான கட்டிட வடிவிலான நீர்த்தொட்டி, 09 பிரிவுகளுக்குரிய இன்வென்ரி உறுப்படிகள் மற்றும் 02 வாகனங்கள் திணைக்களத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தொடர்புடைய சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு மூலதனமாக்கப்படல் வேண்டும்.

(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i) நிலையான சொத்துக்கள் பதிவேடு		
2022 திசெம்பர் 13 ஆந் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம், சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தினுள் நிலையான சொத்துக்கள் மொடியுலினுள் சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை	2025 மே 15 இல் உள்ளவாறு முதலாவது சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	இணங்கப்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுப்பதற்கும், சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தினுள் நிலையான சொத்துக்கள் மொடியுலினுள் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படுவதற்கும் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ii) ஆளணி வேதனங்கள் பதிவேடு		
நிதிப்பிரமாணம் 453 இன் பிரகாரம் ஆளணி வேதனங்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.	இது தயாரிக்கப்பட்டு வருகின்றதுடன் 2025 ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	இணங்கப்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுப்பதற்கும், நிதிப்பிரமாணம் 453 இன் பிரகாரம் 17 ஆம் திறைசேரி மற்றும் கணக்காய்வு மாதிரிப் படிவங்களுக்கமைய ஆளணி வேதனங்கள் பதிவேடொன்று விரைவாக தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(iii) திணைக்கள ஒதுக்கீட்டு (அங்கீகரிக்கப்பட்ட செலவின) பேரேடு

நிதிப்பிரமாணம் 447 இன் பிரகாரம் திணைக்கள ஒதுக்கீட்டு (அங்கீகரிக்கப்பட்ட செலவின) பேரேடு நாளதுவரையாக்கப்பட்டிருக் கவில்லை.	2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து செலவின பேரேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது.	இணங்கப்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுப்பதற்க்கும், நிதிப்பிரமாணம் 447 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் உள்ளடங்கும் வகையில் பொது 138 படிவத்தின் பிரகாரம் திணைக்களத்தின் ஒதுக்கீட்டு (அங்கீகரிக்கப்பட்ட செலவின) பேரேடு பேணப்பட வேண்டும்.

(iv) **பிணைகள் பதிவேடு**

நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	உத்தியோகத்தர்களின் பிணை தொடர்பான பரிந்துரைகள் அமைச்சின் செயலாளருக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிணை பதிவேடு 2025 யூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட வேண்டும்.

(v) **பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு**

நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டு தொடக்கம் உரிய வகையில் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் பிரகாரம் பொறுப்புக்களை நாளாந்தம் பரிசீலனை செய்யக்கூடிய முறையில் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு தாயரிக்கப்படல் வேண்டும்.

(vi) **கடன் மற்றும் முற்பணப் பதிவேடு**

2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்திக்கமைய கடன் மற்றும் முற்பணங்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுள்ளது	இணங்கப்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுப்பதற்கும், குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் சீ.சீ.10 மாதிரியை அடிப்படையாக கொண்ட கடன் மற்றும் முற்பணப் பதிவேடொன்று தொடர்ச்சியாக நாளதுவரையாக்கப்பட்டு

		பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதத்தில் கட்டுநிதி விண்ணப்பிக்கப்படாத 14 பற்றுச் சீட்டுகளுக்காக கூட்டுத்தொகை ரூபா 401,077 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	திறைச்சேரி செயற்பாடுகள் திணைக்களத்துடன் தொடர்புக் கொண்டு தற்போது சீர் செய்யப்பட்டுள்ளது.	கட்டுநிதி விண்ணப்பிக்கப்பட்ட பற்றுச் சீட்டுகளுக்கு மட்டும் கொடுப்பனவு மேற்கொள்வதற்கும், நேரக்கூடிய விலகல்கள் விரைவில் சீர் செய்யப்பட வேண்டியதுடன் இது தொடர்பாக உள்ளக நிர்வாகம் வலுப்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் திணைக்களத்தினால் கட்டுநிதி விண்ணப்பிக்காமையினால் பெறப்பட்டிருந்த கட்டுநிதி 18 சதவீதம் அதாவது 27.80 மில்லியன் திறைச்சேரிக்கு மாற்றப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் எந்த வகையிலும் நேராதிருக்க பார்த்துக் கொள்ளப்படும்.	கட்டுநிதி விண்ணப்பித்தல் உரிய கவனத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கணக்கீட்டு உத்தியோகத்தர் இது தொடர்பாக உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும்.

2.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்கள் செலவின் விடயத்திற்காக (2104) மீளாய்வாண்டினுள் குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாட்டின் ஊடாக ரூபா 70 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அக் குறைநிரப்பு நிதியேற்பாட்டில் 33.56 சதவீதம் அதாவது 23.49 மில்லியன் ஆண்டு இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது. நிதி பிரமாணம் 78(3)(உ)(II) பிரகாரம் தொடர்ந்தும் செலவு செய்வதற்கு தேவைப்படுகின்ற தொகைக்கான பட்டியல்கள் குறிப்பாக இனங்காணப்படாது குறைநிரப்பு நிதியேற்பாடு விண்ணப்பித்தமையினால்	எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் பல்டியல்கள் சமர்பிக்கப்படாமையின் காரணத்தினால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டது.	திட்டமிடப்பட்ட உரிய திகதியில் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்வதற்கு மேற்பார்வை வலுப்படுத்துவதற்கு மற்றும் அதன் பிரகாரம் நிதியேற்பாடு விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

	இவ்வாறு நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.		
(ஆ)	20 மீண்டெழும் செலவின விடயங்களுக்குரிய கூட்டுத்தொகை ரூபா 27.33 மில்லியன் நிதியேற்பாடு மற்றும் 2104 மூலதன செலவு விடயம் தவிர்த்து 07 மூலதன செலவின விடயங்களின் கூட்டுத்தொகை 32.64 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	செயல் நடவடிக்கை திட்டத்தின் அனைத்து பணிகளும் நிறைவேற்றப்பட முடியாமையினால் நிதியேயற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது.	எதிர் வரும் ஆண்டுகளில் நிறுவனத்தின் வளங்கள் மற்றும் காலம் கருத்திற் கொள்ளப்பட்டு செயற்படுத்தக் கூடிய செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் எனவும், அதன் பிரகாரம் தேவையான நிதியேற்பாடு சரியாக மதிப்பிடப்படல் வேண்டும்.

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டினுள் திணைக்களம் கொள்வனவு செய்திருந்த பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 252,322 ஆன கொடுப்பனவு 2025 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது நிதிக் கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு III) உள்ளடக்கப்பட்டிராமையினால் அக் கொடுப்பனவு மீளாய்வாண்டின் பொறுப்பாக இனங்காணப்படாமை அவதானிக்கப்பட்டது. இது 2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைவானதாக இல்லாமையும் அவதானிக்கப்பட்டது.	தவறுதலாக பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்படுவதற்கு முடியவில்லை.	அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைவாக பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் ஆண்டு இறுதியில் அனைத்து பொறுப்புக்களும் இனங்காணக்கூடிய வகையில் உள்ளக நிர்வாக முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	அவதானிப்புக்கள் பெறுமதி ரூபா	இணங்காமை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவை பிரமாணம் 138	49,030	மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது 13 பற்றுச் சீட்டுகளின் செலவுகள் உறுதி செய்யப்படாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.	பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளக நிர்வாகம் மற்றும் பரிசோதனை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை ஊடாக திருத்தப்பட்ட பிரமாணம் 756(6)		2025 சனவரி 31 திகதிக்கு முன்னர் பொருட்கள் ஒப்பாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் 2025 மார்ச் 06 அதாவது கணக்காய்வு திகதி வரையிலும் மீளாய்வாண்டிற்கான பொருட்கள் ஒப்பாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 மே 05 ஆம் திகதியாகையில் ஒப்பாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	பொருட்கள் ஒப்பாய்வு நடவடிக்கைகள் விரைவாக பூர்த்தி செய்து அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும் மற்றும் சுற்றறிக்கை நிபந்தனைகளுக்கு உடன்படுவதற்கு முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ)	2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு	சுற்றறிக்கை பிரகாரம் திணைக்களத்தின் கீழுள்ள கறுவா ஆராய்ச்சி நிறுவனத்தின் 02 வாகனங்கள் தொடர்பில் எரிபொருன் பயன்பாடு பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.	02 வாகனங்களினதும் எரிபொருள் பரிசோதனைகள் 2025 மே 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு விரைவாக மேற்கொள்ளப்பட்டு கணக்காய்விற்கு அறிக்கையிடப்படுவதற்கும், எதிர்காலத்தில் சுற்றறிக்கை நிபந்தனைகளுக்கு உடன்படுவதற்கு முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தேசிய கறுவா தொழில் மற்றும் கலாசார மேம்பாட்டு நிலையத்தின் கட்டுமானத்திற்காக கடந்த ஆண்டுகளில் மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 83.10 மில்லியன் செலவினம் ஏற்கப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய செயற்திட்டம் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன் அதன் செயன் முன்னேற்றம் 72 சதவீதம் மட்டுமென அவதானிக்கப்பட்டது.	எதிர்பார்க்கப்பட்ட வண்ணம் கட்டுமானப் பணிகள் உரிய திகதியில் பூர்த்தி செய்யப்பட முடியாமையினால் ICTAD/SBD/02 இன் 8.4 பிரகாரம் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.	செயற்திட்டம் உண்ணிப்பாக கண்காணிக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் கட்டுமானங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும், நிதி மற்றும் பௌதீக செயன் முன்னேற்றம் கணக்கீட்டு உத்தியோகத்தர் தொடர்ச்சியாக பரிசோதிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	உகந்த தொழிநுட்பம் பயன்படுத்தப்பட்ட கறுவா உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி பதனிடும் நிலையங்களுக்கு தரச் சான்றிதழ்களை வழங்குதல் ஆகிய திட்டத்தை செயல்படுத்துவதில் மீளாய்வாண்டில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	இதற்காக கணிசமான காலம் கடக்கப்படுகின்றமையினால் 03 மாத காலத்தினுள் அச் செயற்திட்டம் பூர்த்தி செய்வதற்கு கடினமானதாகும்.	எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செயற்திட்டம் செயற்படுத்துவதற்காக முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 பெறுகைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தற்போதுள்ள கறுவா தோட்டங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் பயிர் நிலங்களில் வெற்று பயிர்களை நடுவதற்கு மானிய அடிப்படையில் பயிர்களை பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியாகிய 2025 சனவரி 08 ஆம் திகதி வரையிலும் 1,135 பயனாளிகளுக்கு ரூபா 29.14 மில்லியன் பெறுமதியான 1,006,970 கறுவா கன்றுகள் கொள்வனவு செய்யும் போது உரிய பெறுகை நடைமுறை பின்பற்றப்படாது பயனாளிகளுக்கு அருகிலுள்ள நாற்றுமேடைகாரர்களிடமிருந்து கன்றுகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. மேலும் இந்த திட்டத்திற்கான பயனாளிகளை தெரிவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட விவசாய அமைப்புக்களின் கீழ் தெரிவு செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	போக்குவரத்து செலவுகள் கருத்திற் கொள்ளப்பட்டு பயனாளியின் தேவைக்கேற்ப நாற்றுமேடையிலிருந்து பயிர்களை தெரிவு செய்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளதுடன், பயனாளிகளை தெரிவு செய்தல் குறித்து விவசாயிகள் அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை தொடர்பாக மற்றும் விவாசாயிகள் அமைப்புக்கள் ஊடாக பயனாளிகளைத் தெரிவு செய்யப்படாமை தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற மதிப்பீட்டு பெறுமதி ரூபா 21.87 மில்லியனான 04 வாகனங்கள் மற்றும் மதிப்பீட்டு பெறுமதி இனங்காணப்படாத ஏனைய 03 வாகனங்கள் திணைக்களத்திற்கு கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கையகப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	திணைக்களம் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள் குறித்த நிறுவனங்களிடமிருந்து கையகப்படுத்துவதற்கு தாமதமன்றி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ)	திணைக்களத்தின் கீழான கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் கறுவா தோட்டத்தின் 7.5 ஏக்கர் நிலத்தில் கடந்த 10 ஆண்டுகளாக வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆய்வாளர்களின் தீர்மானத்தின் பிரகாரம் 10 ஏக்கர் காணி குத்தகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.	ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட காணியிலிருந்து வருமானம் ஈட்டுவதற்கு விரைவில் வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	சாதாரண பராமரிப்பின் கீழ் ஒரு கறுவா தோட்டத்தில் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறையாவது அறுவடை செய்யப்பட வேண்டிய போதிலும் கறுவா ஆராய்ச்சி நிறுவனத்தின் தோட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளில் 2018, 2020, 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அறுவடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததனால் சுமார் 10.51 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	2025 ஏப்ரல் 17 ஆம் திகதி ஒப்பந்தப்புள்ளிக்காரரினால் விளைச்சல் பெற்றுக் கொள்ளுதலானது ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் எதிர்வரும் காலத்தினுள் உரிய வண்ணம் விளைச்சல் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும், கறுவா தோட்டத்திலிருந்து உயர்பட்ச வருமானம் பெற்றுக் கொள்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	கறுவா அபிவிருத்தி திணைக்களத்தின் பரிந்துரைகளின் பிரகாரம் 17.5 ஏக்கரிலான கறுவா தோட்டத்தில் 63,000 கறுவா புதர்கள் காணப்பட வேண்டியதுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் கறுவா ஆராய்ச்சி நிறுவனத்தின் காணியில் 45,000 கன்றுகள் குறைவாக காணப்பட்டமையினால் முன்மாதிரியாக பயிர் நிலம் பராமரிக்கப்பட வேண்டிய கறுவா ஆராய்ச்சி நிறுவனத்தினாலேயே இந்த நிலத்தில் கறுவா பயிர்செய்கை முறையாக முகாமைத்துவம் செய்யப்படாமையினால், கணிசமானளவு வருமானத்தை இழந்திருந்தது.	காலபோக்கில் இறந்துபோகும் புதர்களை இனங்கண்டு வெற்றிடங்களில் கன்றுகளை நடுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	ஆராய்ச்சி நிறுவனம் என்ற ரீதியில் முன்மாதிரியான பயிர்செய்கைளை பராமரிக்க வேண்டும்.

3.4 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கறுவா அபிவிருத்தி திணைக்களம் நிறுவுவதற்கு மற்றும் அலுவலக வசதிகளுக்காக மாதாந்தம் ரூபா 300,000 வாடகைக்கு 2023 திசெம்பர் 06 ஆம் திகதி தொடக்கம் 2026 திசெம்பர் 05 ஆம் திகதி வரையில் 03 ஆண்டு காலத்திற்காக தனியார் தரப்பினருக்கு சொந்தமான குடியிருப்பு கட்டிடமொன்று பயன்படுத்தப்பட்டது. எனினும் நிறுவனத்திற்காக நிரந்தர கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்கான தேவை 2025 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.	பொருத்தமான அரச கட்டிடமொன்று இல்லாமையினால் 03 ஆண்டுகளாக வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டது.	அரச அலுவலகங்கள் அரச கட்டிடங்களுக்குள்ளேயே நடத்திச் செல்லும் அரசின் கொள்கைக்கு அமைவாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டினுள் ரூபா 1.32 மில்லியன் செலவொன்று ஏற்கப்பட்டு பிரதான அலுவலகம் நடத்திச் செல்லப்படுகின்ற வாடகை கட்டிடத்தில் வெவ்வேறு கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசின் நிரந்தர கட்டிடமொன்றில் நிறுவப்படாது இவ்வாறு ஏற்கப்படுகின்ற செலவுகள் விளைவற்றதாக கூடும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் கட்டிடத்தின் குத்தகையாளருடன் இந்த கட்டுமானம் தொடர்பில் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த கட்டுமானங்கள் அனைத்தும் அகற்றக் கூடிய வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையினால் இது விளைவற்ற செலவினம் அல்ல.	பொருளாதார ரீதியாக வினைத்திறனுடன் செயற்படுவதற்காக, திணைக்களத்தை விரைவாக பொருத்தமான அரச கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4. நல்லாளுகை

4.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கறுவா பயிர்செய்கை தொடர்பான தரவுகளை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்காக 2016, 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கறுவா ஆராய்ச்சி நிறுவத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட கூட்டு பெறுமதி ரூபா 25.35 மில்லியனான 06 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் உறுப்படிகள் மற்றும்	தொடர்புடைய உபகரணங்களை சரி செய்வதற்கான பழுதுபார்க்கும் பணிகள் 2025 ஆம் ஆண்டில் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது மற்கும் செயலிழந்த உபகரணங்கள் மீண்டும் வருமானம் ஈட்ட தேவையான	இந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விரைவாக பழுதுபார்க்கப்பட்டு பயிர்செய்கைக்கு தேவையான தரவுகள் சேகரிகத்தல் மற்றும் பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி குறிப்பிடப்பட்டிராத 02 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் உறுப்படிகள் 2021 தொடக்கம் 2024 காலப்பகுதியினுள் செயலிழந்ததன் காரணத்தினால் 2025 சனவரி 09 ஆம் திகதி உள்ளவாறு 03 வகைகளுக்குரிய 4,820 பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.	நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.	பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு விரைவாக வேலைத்திட்டங்கள் மேற்கொள்ள வேண்டும்.
(ஆ)	ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் போது தேவையான உபகரணங்கள் இல்லாமை, தேவையான பயிற்சி இல்லாமை, பரிசோதிக்கப்பட்ட தயாரிப்புக்களை வணிகமயமாக்கலில் உள்ள பிரச்சினைகள் காரணமாக ஆராய்ச்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்து அதிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகளை பெறுவதில் கேள்விகுறியான நிலைமை நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.	அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.	குறித்த காலவறையினுள் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தேவையான உபகரணங்கள், பயிற்சி பயிச்சித் தேவைகள் மற்றும் பரிசோதிக்கப்பட்ட தயாரிப்புகளை வணிகமயமாக்கல் தொடர்பான பிரச்சினைகள் துரிதமாக தீர்க்கப்பட்டு நிறுவன நோக்கங்களை அடைவதற்கு முறையான வேலைத்திட்டத்திதை தயாரிக்க வேண்டும்.

4.2 உள்ளக கணக்காய்வு

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாண கோவையின் 133 மற்றும் 134 பிரமாணங்களில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)ஊ பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று நிறுவப்பட்டிராததுடன் உள்ளக கணக்காய்வு பதவி இது வரையில் வெற்றிடமாக காணப்பட்டது.	உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக நிலவுகின்றமை மற்றும் போதுமான உத்தியோகத்தர்கள் காணப்படாமை	தொடர்புடைய ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று விரைவாக நிறுவப்படுதல் வேண்டும்.

5. மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 45 வெற்றிடங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது இதில் பிரதானமாக	ஆட்சேர்ப்பிற்காக பரிந்துரையுடன் அரச சேவைகள் ஆனைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் ஆட்சேர்ப்பு நடைமுறை	ஆட்சேர்ப்பு நடைமுறை விரைவில் அங்கீகரித்துக் கொள்வதற்கும் அதன் பிரகாரம் நிறுவனத்தின்

	கறுவா அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடங்கள் நிலவுகின்றமையினால் நிறுவன நோக்கங்கள் நிறைவேற்றுவதில் அது தடையாக இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.	இதுவரையில் அங்கீகரிக்கப்படாமையினால் ஆட்சேர்ப்புக்கள் தாமதிக்கப்பட்டுள்ளது.	நோக்கங்களை அடைவதற்கு தேவையான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அல்லது அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக நிறுவனத்தின் மிகை மற்றும் பபற்றாக்குறை முகாமைத்தும் செய்யப்பட்டு திணைக்களத்தின் அத்தியாவசிய வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	திணைக்களத்தின் செயற்பாடு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பிரதான பணிகளை நிறைவேற்றும் நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர் (நிரந்தர), தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் பதவிகளுக்காக எவரும் நியமிக்கப்பட்டிராததுடன் இந்த பதவிகளுக்குரிய 05 உத்தியோகத்தர்களின் பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டது. மேலும் கணக்காளர் பதவிக்காக பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தரொருவர் இணைக்கப்பட்டிருந்தது.	உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு தொடர்பாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	நிறுவனத்தின் நோக்கங்கள் நிறைவேற்றுவதற்குரிய பிரதான பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் விரைவாக ஆட்சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.